மேன்மைமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திருத்துறைப்பூண்டி

**அ.வ.எண்.01/2018**

1. கலைச்செல்வி
2.மனோகரன் ..... வாதிகள்

... எதிர் ....

1. இந்திராணி
2. விஜயபாபு
3.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
4.மாவட்ட ஆட்சியர், திருவாரூர் ..... பிரதிவாதிகள்

**தாவா பொருமான பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| 1 | வழக்கின் தன்மை | : | நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி |
| 2 | வழக்கின் பொறுமானம் | : | ரூ. 2000/- |
| 3 | செலுத்தப்படும் நீதிமன்றக் கட்டணம் | : | ரூ. 60/- |
| 4 | நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படும் சட்டப்பிரிவு அதன் உட்பிரிவு | : | தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் 14/55 பிரிவு 27(சி)ன் படி. |
| 5 | மார்கெட் மதிப்பு | : | ரூ.-- |
| 5 | குத்தகை மதிப்பு | : | ரூ.-- |

(ஒப்பம்) (ஒப்பம்)
வாதி வழக்கறிஞர்

//உண்மை நகல்//

தலைமை எழுத்தர்.

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி.</u>

முன்னிலை : திரு.கே.ராஜேஷ்கண்ணன், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

2020ம் வருடம் பிப்ரவரி மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2051, விகாரி வருடம் மாசி மாதம் 02ம் நாள்)

**<u>அசல் வழக்குஎண்.01/2018</u>**

1 திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி டி.மு.இலாக்கா, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, மேலகொருக்கை, பிள்ளையார்கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் பாலு மனைவி சுமார் 50 வயதுள்ள கலைச்செல்வி.

2 திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி டி.மு.இலாக்கா, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, மேலகொருக்கை, பிள்ளையார்கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் பாலு மகன் சுமார் 33 வயதுள்ள மனோகரன்.

..............வாதிகள்

//எதிர்//

| | |
|---|---|
| 1 | திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி டி.மு.இலாக்கா, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, மேலகொருக்கை, பிள்ளையார்கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் ரெத்தினசாமி மனைவி சுமார் 57 வயதுள்ள இந்திராணி. |
| 2 | திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி டி.மு.இலாக்கா, திருத்துறைப்பூண்டி தாலுக்கா, மேலகொருக்கை, பிள்ளையார்கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் ரெத்தினசாமி மகன் சுமார் 33 வயதுள்ள விஜயபாபு. |
| 3 | வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருத்துறைப்பூண்டி. |
| 4 | மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர். |

....... பிரதிவாதிகள்

வாதிகளின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, அல்லது வேறு எவருமோ எவ்விதமான அத்துமீறல் அழிமானம், இடைஞ்சல், இடையூறு ஆக்கிரமிப்பு, குற்றமுறு பிரவேசம் போன்ற எவ்விதமான சட்டப்புறம்பான செயல்களில் ஈடுபடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும் படிக்கும், 3ம் பிரதிவாதி கொருக்கை கிராம புல எண்.20/1D பொறுத்து 1ம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதை நீக்கரவு செய்து 1ம் வாதியின் பெயரை பதிவு செய்ய ஏதுவாக செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், இந்த வழக்கிற்கான செலவு தொகையினை வாதிகளுக்கு 1,2 பிரதிவாதிகள் கொடுக்க வேண்டுமென கேட்டும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கலான நாள் : 05.01.2018

இத்தாவாவிற்கு 30.07.2009, 01.12.1993, 14.04.2012, 17.07.2017 மற்றும் 01.01.2018 ஆகிய தேதிகளில் திருத்துறைப்பூண்டி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட கொருக்கை கிராமத்தில் உற்பத்தி.

இத்தாவாவானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்க்காக ரூ.1000 என மதிப்பீடு செய்யப்பட்டு தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணச் சட்டம்14/55ன்படி பிரிவு 27(சி)ன்படி ரூ.30.00/- நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இத்தாவாவானது செயல் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்க்காக ரூ.1000 என மதிப்பீடு செய்யப்பட்டு தமிழ்நாடு நீதிமன்றக்கட்டணச் சட்டம்14/55ன்படி பிரிவு 27(சி)ன்படி ரூ.30.00/- நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆகக் கூடுதல் நீதிமன்றக்கட்டணம் ரூ.60 /- ஆகும்)

இவ்வழக்கு 05.01.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பிலெடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எஸ்.செந்தில்குமார், அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வ.அரசு, அவர்கள் முன்னிலையாகியும், 3ம் மற்றும் 4ம் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள நிலையில் இன்று (14.02.2020) இவ்வழக்கு வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டிருந்த நிலையில், வா.சா.1ஐ அழைத்து ஆஜரின்மையாலும், எடுத்துரைப்பும் இல்லாத நிலையிலும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.......

**தீர்ப்பாணை**

1. வாதிகளின் தவறுகையால் தாவா தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. 1,2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவுத்தொகையை வாதிகள் செலுத்த வேண்டும்( பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

**தாவா சொத்து விபரம்**

நாகப்பட்டினம் பத்திரப்பதிவு மாவட்டம், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சார்பதிவகம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, கொருக்கை கிராமத்தில் உள்ள.

புல எண்.20/1D மானாவாரி விஸ்தீரணம் 0.21.5 ஏர்ஸ்.

**நான்கெல்லை**

ரோட்டிற்கு தெற்கு, இந்திரா நிலத்திற்கு மேற்கு, ரெத்தினசாமி நிலத்திற்கு கிழக்கு, பாலு நிலத்திற்கு வடக்கு இதற்குட்பட்டதாகும்.

2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்துறைப்பூண்டி.